1982 மார்ச் 17]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல அம்பத்தூர் ஏரி 2330 ஏக்கர் பாசன பரப்புக் கொண்டிருந்தது. அந்தப் பகுதியிலே தொழிற்பேட்டைகளும், குடியிருப்புகளும் பெருகி விட்டதால். தற்போது இந்த ஏரியின் கீழ் 250 ஏக்கர் நிலமே பாசனத்திற்காக உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல, சென்னைக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காக இந்த அம்பத்தூர் ஏரியைப் பயன்படுத்தலாமா என்பது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சருடன் பேசிக் கொண்டிருக்கிறோம், அது குறித்து அரசு தக்க முடிவுகளை விரைவிலே எடுக்கும்.

மாண்புமிகு திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, 50 இலட்சம் ரூபாய் செலவிலே இந்த ஏரியில் அதிகமாக வருகிற தண்ணீரை, மொகப்பையர் ஏரியின் வழியாக, கூவம் ஆற்றிற்கு திருப்பும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேறும் என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எற்றுக் கொள்ளப் பெற்றிருக்கிறது. பணம் ஒதுக்கீடு செய்யப் பெற்றிருக்கிறது. விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

திரு. து. இராசரத்தினம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில், அம்பத்தூர் ஏரி 2 ஆயிரத்து சொச்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கொடுத்தது; தற்போது 250 ஏக்கருக்கு மட்டும் தான் கொடுத்து வருகிறது என்று சொன்னார்கள். ஆகவே, புறநகர்ப் பகுதிகளுக்கு அம்பத்தூர்ஏரியிலிருந்து தண்ணீர் சப்ளை செய்ய, ஏதாவது நடவடிக்கைஎடுத்து நல்ல ஏற்பாடாக செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காகவும், புறநகர்ப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்காகவும், இந்த ஏரியைப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனை கூறப்பட்டது. அது வரவேற்கத் தகுந்த விஷயம் என்று கூறி, அதனை அரசு ஆலோசிக்கும் என்று ஏற்கெனவே கூறியிருக்கிறேன்.

பொதுப் பாசனக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரைப்பகிர்ந்து கொள்ளும் திட்டம்

*வினா எண் 455 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பொது பாசனக்கிணறுகள் மூலம் நிலத்தடி நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றிய தீவிர திட்டம் ஒன்று தயார் செய்து கிணறு வெட்ட முடியாத சிறு விவசாயிகள் பயன் அடையும் வகையில் யூனியன் வாரியாக அமுல் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் என்றால் எப்போது அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் மாநில குழாய் கிணறு வாரியம் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த வாரியம் விரைவில் செயல்படவிருக் கிறது. இந்த வாரியத்தின் மூலம் சமுதாய கிணறுகள் முதலிய வைகளை அமைத்து இயக்கி மேலும் அவைகளை பராமரித்து அதன்மூலம் விவசாயிகள் பயனடைவார்கள்.

திரு. கோவைத் தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் சமுதாயக் கிணறுகளைப் பற்றிச் சொன்னார்கள். அந்த சமுதாயக் கிணறுகளில் கொடுக்கிற தண்ணீர் எந்த அடிப்படையில் சிறு விவசாயிகளுக்கு வழங்கப் படும்? எவ்வளவு ஏக்கருக்கு ஒரு சமுதாயக் கிணறு அமைக்கப் படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய நீர் வளத்தைப் பொறுத்துத்தான் எவ்வளவு ஏக்கருக்கு கொடுக்க முடியும் என்பதை தீர்மானிக்க முடியும். கூடுமானவரையில் நிலத்தடி நீரை தனிப்பட்ட முறையிலே பயன்படுத்தி விவசாயம் செய்யமுடியாத ஏழை விவசாயிகளுக்கும், சிறு விவசாயிகளுக்கும் அந்த நீரை பகிர்ந்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு, அதன் அடிப்படையில்தான், இந்த சமுதாயக்கிணறுகள் அமைக்கப்பட விருக்கிறது. அந்தந்தப்பகுதிக்கு எவ்வளவு கொடுப்பது என்பது இருக்கும் நிலத்தடி நீர் வளத்தைப் பார்த்து, எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு கொடுப்பது என்பது பற்றியும் இன்னும் பலவகையான உதவிகளைப் பற்றியும்—அரசு மானியம் உட்பட, விவசாயிகளுக்கு பல உதவிகளைச் செய்வதற்கு, அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. செ. சிவசாமி: நிலத்தடி நீரைக் கண்டு பிடிப்பதற்கு எத்தகைய அமைப்புகள் உள்ளன? எங்கெங்கு இந்த சமுதாயக் கிணறுகள் அமைக்கப்படவிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி ஒட்டு மொத்தமாக தமிழ்நாடு பூராவும் கேட்டால் அமைச்சர் எப்படி பதில் சொல்வார்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்து விவரமாகத் தரப்படும்.